பக்கங்கள்:08

காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 04 சனிக்கிழமை 19.12.2020 கதிர் 274

# ஜெனிவாவை ஐக்கியப்பட்டு அணுக கூட்டமைப்பு உறுதி

## மற்றைய தமிழ்க் கட்சிகளுடன் பேசவும் முடிவு இன்றைய கொழும்புக் கூட்டத்தில் தீர்மானம்

கொழும்பு,டிசெ.19

ஜெனிவாவில் வரும் மார்ச் மாதம் நடைபெறும் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத் தொடர் தொடர்பில் சர்வதேச சமூகத்தைத் தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் சேர்ந்து ஒன்றுபட்டு கையாள முயற்சிப்பது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று தீர்மானித்தது. இதற்காக அக்கட்சிகளுடன் தொடர்ந்து பேசுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

கொழும்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் இல்லத்தில் இன்று நடைபெற்ற கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

2

## கொரோனாவிலிருந்து 27,552 பேர் மீண்டனர்!

கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான நிலையில் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருபவர்களில் மேலும் 491 பேர் குணமடைந்து இன்று வீடு திரும்பினர்.

இதன்படி இலங்கையில் கொரோனாவின் பிடிக்குள் இருந்து மீண்டவர்களின் எண்ணிக்கை 27 ஆயிரத்து 552 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் 8 ஆயிரத்து 332 பேருக்கு தொடர்ந்தும் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது. கொரோனாவால் 165 பேர் உயிரிழந்துள்ளனர்.

## கொழும்பில் தொற்று 15,624 ஆக உயர்வு!

கொரோனா வைரஸ் தாக்கத்தின் மூன்றாவது அலையால் கடந்த ஒக்டோபர் மாதம் 4 ஆம் திகதியில் இருந்து நேற்று வரை கொழும்பு மாவட்டத்தில் 15 ஆயிரத்து 624 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது.

2

## கப்பலின் பாகமே கரை ஒதுங்கியது



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை கடற்கரைப்பிரதேசத்தில் இன்று காலை கரை ஒதுங்கியது கப்பலின் அலை வரிசை கோபுரமாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

2

## முல்லை வவுனிக்குளைத்தினுள் பாய்ந்தது பட்டா ரக வாகனம்!

### தந்தை – 2 வயது மகளைக் காணோம்





(ந.லோகதயாளன்)

முல்லைத்தீவு மாவட்டம், வவுனிக்குளக்கட்டின் மீது நால்வருடன் பயணித்த பட்டாரக வாகனம் இன்று மாலை குளத்துக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானது.

இதன் போது வாகனத்தில் இருந்த தந்தையும் இரண்டு வயது மகளும் காணாமல்போயுள்ளனர். 12 வயது மருமகன் நீண்ட நேரத்தின்பின் ஆபத்தான நிலையில் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். மற்றொரு மகன் நீந்திக் கரை சேர்ந்துள்ளார். வவுனிக்குளம், செல்வபுரம் பகுதியைச்சேர்ந்த குட்டிஎன்பவருடைய வாகனமே விபத்தில் சிக்கியுள்ளது.

காணாமல்போன தந்தையையும் மகளையும் தேடும் பணியில் பொது மக்கள், பொலிஸார் மற்றும் படையினர் ஆகியோர் ஈடுபட்டுள்ளனர்.

### பொய்ப்பித்துப் போகுமா அரசின் உறுதிமொழி?

## மாகாண சபைகள் முறைமைக்கு எதிராக கோட்டாவின் சகா மீண்டும் போர்க்கொடி!



### இந்தியா மீதும் கடும் தாக்கு

மாகாண சபைத் தேர்தல் எதிர்வரும் மார்ச் மாதமளவில் நடத்தப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல உறுதியளித்துள்ள நிலையில், மாகாண சபைகள் முறைமைக்கு எதிராக

2

## கொரோனாத் தொற்று ஏற்படாதவாறு நத்தார் பண்டிகையைக் கொண்டாடுக

### யாழ். மாவட்ட மக்களிடம் பொலிஸ் வேண்டுகோள்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்ட மக்கள் கொரோனா வைரஸ் தொற்று ஏற்படாதவாறு நத்தார் பண்டிகையைக் கொண்டாட வேண்டும்.

- இவ்வாறு யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் சேனாரத்ன தெரிவித்தார்

யாழ். மாவட்ட கொரோனா நிலைமைகள் தொடர்

2



## இந்தியத் தூதுவருடன் கூட்டமைப்பு சந்திப்பு

கொழும்பு, டிசெ.19

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேயை இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேற்று நேரில் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் இல்லத்தில் இந்தப் பேச்சு இடம்பெற்றது.

2

### களுத்துறை மாவட்டத்தில்

## கொரோனா வைரஸின் பிடிக்குள் 55 கர்ப்பிணிப் பெண்கள் இலக்கு!

கொரோனா வைரஸ் தாக்கத்தின் இரண்டாவது அலை மூலம் களுத்துறை மாவட்டத்தில் இதுவரை 55 கர்ப்பிணிப் பெண்களுக்கு வைரஸ் தொற்றியுள்ளது.

இந்தத் தகவலை அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் இன்று வெளியிட்டுள்ளது.

கொரோனா வைரஸ் களுத்துறை மாவட்டத்தில் வேமாகப் பரவி வருவதால் அதனைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் அங்கு கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தும் மேற்படி சங்கம்,

2

## 85 ஆக இன்று உயர்ந்தது மருதனார்மடம் கொத்தணி!

மருதனார்மடம் பொதுச் சந்தை கோரோனா வைரஸ் கொத்தணியில் மேலும் 8 பேருக்கு கோவிட் -19 நோய்த் தொற்று உள்ளமை இன்று சனிக்கிழமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மருதனார்மடம் கொத்தணி எண்ணிக்கையும் 85 ஆக உயர்வு அடைந்துள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

மருதனார்மடம் பொதுச் சந்தை வியாபாரிகளுடன் நேரத் தொடர்புடைய 8 பேருக்கே


2

## முதியோர் இல்லத்தில் ஒருவர் சாவு 45 பேருக்குக் கொரோனா உறுதி

கொழும்பு, மோதர பகுதியிலுள்ள முதியோர் இல்லத்தில் 45 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

அண்மையில் இந்த முதியோர் இல்லத்தில் ஒருவர் உயிரிழந்ததையடுத்து அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனைகளில் கொரோனாத் தொற்றுள்ளமை இனங் காணப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் 98 பேருக்கு பி.சி.ஆர். பிரிசோதனைகள் மேற்



கொள்ளப்பட்டன எனவும், அவர்களில் 45 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது எனவும் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

## காளியம்மன் பற்றிப் பேசுவதை நிறுத்தவேண்டும் ‘பாணி தம்மிக’

### மனோ எம்.பி. வலியுறுத்து

கொறொனாவுக்குப் 'பாணி மருந்து' கண்டு பிடித்துள்ளார் என்று அரசின் சில அமைச்சர்களால் மகிமைப்படுத்தப்பட்டு ஓடித்திரியும் 'பாணி தம்மிக' என்ற நாட்டு வைத்தியரை சில தேரர்கள், 'தேசிய மோசடிக்காரன்' என்கிறார்கள். சிலர், 'தேசிய வீரன்' என்கிறார்கள்.

எனக்கு இதில் அக்கறை இல்லை. ஆனால், இவர் இந்துக் கடவுளான காளியம்மன் பற்றிப் பேசுவதை உடன் நிறுத்த வேண்டும்.

-இவ்வாறு தமிழ் முற்போக்குக்கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற

2



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## கொரோனா வைரஸின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மக்கள் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளது.

அவ்வாறு இல்லாவிட்டால் மாவட்டத்துக்குள்ளேயே உப கொத்தணிகள் உருவாகக்கூடும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, களுத்துறை மாவட்டத்தில் இதுவரை 2 ஆயிரத்து 448 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது. நேற்று மாத்திரம் 164 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## இந்தியத் தூதுவருடன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சந்திப்பில் கூட்டமைப்பின் உயர்மட்டத் தலைவர்கள் மட்டுமே பங்கேற்றனர். அதேநேரம், இந்தச் சந்திப்பில் பேசப்பட்டவற்றைப் பகிரங்கப்படுத்துவதில்லை என்றும் இரு தரப்பினரும் தீர்மானித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தமிழர் விவகாரம், ஜெனிவா விவகாரம், பொருளாதாரம், சமகால அரசியல் விடயங்கள் குறித்து முக்கியமாக இதன் போது பேசப்பட்டன என்றும் தெரியவந்தன.

அத்துடன் வடக்கு, கிழக்கில் பொருளாதார அபிவிருத்தி மற்றும் வேலைவாய்ப்பை உருவாக்கக்கூடிய திட்டங்களைச் செயற்படுத்துவது தொடர்பிலும் கூட்டமைப்பு வலியுறுத்தியது.

இதேவேளை, பலாலி விமான நிலையத்தை மீளவும் இயங்கச் செய்ய இந்தியா அழுத்தம் கொடுக்கும் என்றும், காங்கேசன்துறை துறைமுகத்தை இயக்கவும் நடவடிக்கை எடுக்கும் என்றும் தூதுவர் சார்பில் தெரிவிக்கப்பட்டது எனவும் கூறப்பட்டது.

## காளியம்மன் பற்றிப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:-

நான் இந்த நாட்டு வைத்தியரின் பாணி மருந்தை இதுவரை குடிக்கவில்லை. இனிமேல் குடிக்கும் எண்ணமும் இல்லை.

எங்கள் வீட்டில் கொரோனா வைரஸ் நோய்த் தொற்று இதுவரை வராமைக்குக் காரணம், எங்க வீட்டு 'சித்த வைத்திய' பானங்கள்தான். இவை நாம் எப்போதும் பாரம்பரியமாக எங்கள் பூட்டன், பூட்டி காலத்திலிருந்து பின்பற்றி வரும் இயற்கை மருந்து பானங்கள்.

இங்கே எனது பிரச்சினை என்னவென்றால், இந்தப் 'பாணி தம்மிக' என்ற நாட்டு வைத்தியர், தனக்குத் துணையாக 'காளியம்மனை' அழைத்துள்ளதாகும். இவர் தனக்குக் காளியம்மன் அருள் பாலித்திருக்கின்றார் எனக் கூற, இவரை எதிர்ப்போர் காளியம்மனையும் சேர்த்து விமர்சிக்கின்றார்கள். இது நிறுத்தப்படவேண்டும். காளியம்மன், பார்வதி தேவையின் ஓர் அவதாரம். பார்வதி, இந்துக்களின் மூத்த தாய்க் கடவுள். - என்றார்.

## 85 ஆக இன்று உயர்ந் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இவ்வாறு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இதன்மூலம் மருதனார்மடம் கொரோனா கொத்தணியின் மூலம் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 85ஆக அதிகரித்துள்ளது.

இன்று அடையாளம் காணப்பட்டவர்களில் நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த 5 பேர் உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த இரண்டு பேர் மற்றும் சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த ஒருவர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துபீட ஆய்வுகூடத்தில் இன்று 110 பேரின் மாதிரிகள் பிசிஆர் பரிசோதனைக்கு உள்படுத்தப்பட்டன. அவற்றில் 6 பேருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஏனைய 104 பேருக்கு தொற்று இல்லை என்று அறிக்கை கிடைத்துள்ளது என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

அத்துடன் முல்லேரியா ஆய்வுகூடத்தில் சோதனைக்கு உள்படுத்திய 300 பேரில் 2 பேருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டதாக சுகாதார பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்

## கொரோனாத் தொற்று .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
துரைக்கும்போதே அவர் மேற் கண்டவாறு கூறினார். இதன்போது அவர் மேலும் தெரிவித் ததாவது:-

யாழ்மாவட்டத்தில் தற்போது ஒவ்வொரு நாளும் கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றார்கள். எனவே, இனிவரும் காலங்களில் பொதுமக்கள் மிகவும் அவதானமாகச் செயற்பட வேண்டிய காலமாகவுள்ளது.

அதிலும் குறிப்பாக எதிர்வரும் நாள்களில் நத்தார் மற்றும் புதுவருடக் கொண்டாட்டங்கள் வருகின்றன. பொதுமக்கள் நாட்டில் உள்ள சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி மற்றும் மதத் தலைவர்களின் வழிகாட்டலைப் பின்பற்றி தங்களுடைய கொண்டாட்டங்களைச் செயற்படுத்த வேண்டும்.

தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்கள் தமது வீடுகளிலேயே குறித்த கொண்டாட்டங்களைக் கொண்டாடுங்கள் வெளியே செல்ல முயற்சிக்காதீர்கள். நத்தார், புதுவருடக் கொண்டாட்டங்கள் தொடர்பில் பொலிஸ் திணைக்களமும் சில சுகாதார நடைமுறைகளை அறிவித்துள்ளது.

அத்தோடு தேவாலயங்களில் மட்டுப்படுத்தப்பட்டவர்களுடன் ஆலய பூஜை வழிபாடுகளை மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. அதனை அனைத்துப் பொதுமக்களும் பின்பற்றிச் செயற்பட வேண்டும்.

பொதுமக்கள் அதிகளவில் ஒன்றுகூடுதலைத் தவிர்க்கவேண்டும். கடந்த வருடக் கொண்டாட்டங்களைப் போலல்லாது இம்முறை தற்போது உள்ள கொரோனா நிலைமையைக் கருத்தில்கொண்டு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இவ்வருட நத்தார் மற்றும் புதுவருடக் கொண்டாட்டங்களைச் செயற்படுத்துங்கள். கொரோனாத் தொற்று மேலும் பரவாது தடுப்பதற்கு நாம் அனைவரும் சுகாதாரப் பகுதியினருக்கு ஒத்துழைத்துச் செயற்பட வேண்டும். - என்றார்.

## மாகாண சபைகள் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர மீண்டும் போர்க் கொடி தூக்கியுள்ளார்.

மாகாண சபைகள் முறைமையால் நாட்டில் உயிர்த் தியாகம் செய்த, அங்கவீனமடைந்த படையினருக்கு அவமரியாதை ஏற்பட்டுள்ளது எனவும், 9 மாகாணங்களில் 9 விதமான சட்டங்களை உருவாக்க முடியுமாயின், ஒரே நாடு ஒரே கொள்கை பொய்யாகிவிடும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அம்பாறை மாவட்ட சிவில் பாதுகாப்பு அதிகாரிகளை நேற்று சந்தித்து உரையாடியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்திய - இலங்கை ஒப்பந்தம் நடைமுறையில் இல்லை. ஒரே நாடு ஒரே கொள்கை என்பதே ஜனாதிபதியின் கொள்கை என்பதால், மாகாண சபை முறைமையை எதிர்க்கின்றேன்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின்படி, தமிழீழ விடுதலைப்புலிகளை நிராயுதபாணிகளாக்குவது, மீண்டும் போர் ஏற்படாமல் பார்த்துக்கொள்வது, வடக்கில் வாழ்ந்த மக்களை மீள்குடியேற்றுவது ஆகிய மூன்று நிபந்தனைகளை இந்தியாவால் நிறைவேற்ற முடியாமல்போயுள்ளது.

இந்த உடன்படிக்கை நடைமுறையில் இல்லாத நிலையில் மாகாண சபை முறைமைக்கு இணங்கி மாகாண சபைகள் மூலமோ அரசமைப்பின் மூலமோ நாட்டை எவருக்கும் வழங்கப்போவதில்லை.

மாகாண சபைகள் முறைமையால் நாட்டில் உயிர்த் தியாகம் செய்த, அங்கவீனமடைந்த படையினர்களுக்கு அவமரியாதை ஏற்பட்டுள்ளது - என்றார்.

## கப்பலின் பாகமே கரை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காங்கேசன்துறை பகுதியில் உள்ள சுனாமிக் கோபுரம் இது என ஆரம்பத்தில் கருதப்பட்டபோதும் காங்கேசன்துறைப் பகுதியில் சுனாமி கோபுரமே இல்லை என்பதனால் கற்படையினருக்கு இது குறித்துத் தகவல் வழங்கப்பட்டது.

அந்த இடத்திற்குச் சென்ற கடற்படையினர் அது தொடர்பில் ஆராய்ந்துவருவதோடு நடுக் கடலில் பயணித்த கப்பல் புரவி புயல் காலத்தில் அகப்பட்டோ அல்லது வேறு விபத்துக்களின்போதே கடலில் வீழ்ந்த பாகமாக இருக்கலாம் என கருதப்படுகின்றது.

இருந்தபோதும் குறித்த பொருள் இதுவரை சரியாக இனம் காணப்படாத நிலையில் அப்பகுதியிலேயே காணப்படுகின்றது.

## கொழும்பில் தொற்று ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொழும்பு மாவட்டத்தில் நேற்று மாத்திரம் 259 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதேவேளை, கொரோனா வைரஸ் தாக்கத்தால் கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவானவர்கள் உயிரிழந்துள்ளனர். அத்துடன் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக கொழும்பில் சில பகுதிகள் தொடர்ந்தும் முடக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜெனிவாவை ஐக்கியப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இன்றைய கூட்டத்தில் செல்வம் அடைக்கலநாதன், கருணாகரம் (ஜனா), சாணக்கியன், கலையரசன், சுமந்திரன், ஸ்ரீதரன் ஆகிய எம்.பிக்களும், மாவை சேனாதிராசா, ரெலோவின் சுரேந்திரன் குருசுவாமி ஆகியோரும் பங்குபற்றினர்.

புலம்பெயர் தமிழ் அமைப்புகளினால் தயாரிக்கப்பட்ட ஒரு நகல் வடிவமே வரைவுத் திட்டமாக சுமந்திரனால், கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கும் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனுக்கும் சமர்ப்பிக்கப்பட்டது என்று கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

அவர்கள் அந்த நகல் வரைவை நிராகரித்துள்ள நிலையில், ஜெனிவா விவகாரத்தைத் தமிழ்த் தேசியக் கட்சிகள் எல்லாம் ஒன்றுபட்டு அணுகும் வகையில் அக் கட்சிகளுடன் தொடர்ந்து பேசுவது என இன்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (உ)

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம்- 076 443 8622



# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இலங்கை மக்களுக்கு தடுப்பூசி கிடைக்குமா?

கொரோனாக் கொள்ளை நோய் உலகம் முழுவதையும் போட்டிப் புரட்டி எடுக்கின்றது.

கொரோனாவை ஒட்டி மக்களுக்கு விழிப்புணர்வுப் பிரசாரங்கள் உலகம் முழுவதும் முன்னெடுக்கப்படுகின்றன. இலங்கையும் அதற்கு விதி விலக்கல்ல. இங்கும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் முழு மூச்சாக முன்னெடுக்கப்படுகின்றன.

முகக் கவச் அணிதல், சமூக இடைவெளி பேணுதல், கூட்டமாகக் கூடுவதைத் தவிர்த்தல், அடிக்கடி கைகளை சோப் போட்டுக் கழுவுதல் என்று பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மக்கள் ஒன்று கூடுவதற்கான வாய்ப்புகள் தடுக்கப்படுகின்றன.

தொற்றாளர்களைக் கண்டுபிடிக்கும் பி.சி.ஆர். சோதனைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுகின்றது.

இவை எல்லாம் கொரோனா கொடூரன் என்ற வைரஸ் சமூகத்தில் அகலக் கால் பரப்பிப் பரவுவதைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளேயன்றி, அதனை ஒழித்துக் கட்டும் மார்க்கமல்ல.

தொற்றின் பரவல் வேகம் அதிகரிக்கும் போது அதனை மட்டுப்படுத்துவதற்காகப் பிரதேசங்கள் முடக்கப்படுகின்றன. அது கூட பரவலைக் கட்டுப்படுத்திக் குறைக்கும் முயற்சியே தவிர, கொரோனா வைரஸை அடியோடு ஒழிக்கும் நடவடிக்கையேயல்ல.

இப் பிரச்சினையிலிருந்து நாடும், உலகமும் நாமும் விடுபடுவதாயின் பின்வருவனவற்றில் ஏதாவது ஒன்று நடக்க வேண்டும்.

ஒன்று – கொரோனா வைரஸை இப்பூவுலகில் இருந்து முற்றாக ஒழிக்க வேண்டும். இல்லாமல் செய்ய வேண்டும்.

அடுத்தது – அது முடியாதது எனின், அந்தக் கொரோனாத் தொற்று மனிதனுக்கு ஏற்படாமல் உறுதிப்படுத்த வேண்டும்.

இதில், முதலாவது சாத்தியமற்றது என்பதால் இரண்டாவது குறித்து சர்வதேச உலகம் சிந்திக்கின்றது, முயற்சிகின்றது.

கொரோனா வைரஸை உலகில் இருந்து முற்றாக ஒழிப்பது இப்போதைக்குச் சாத்தியமற்றது என்று கருதப்படுவதால், அது பூவுலகத்தில் நிலை கொண்டிருக்க, அது மானுடனின் உடலில் தொற்றாத பாதுகாப்பு நிலைமையை ஏற்படுத்துவது குறித்து சிந்திக்கப்படுகின்றது.

அதற்காகவே தடுப்பூசிகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவசர அவசரமாக அவற்றைத் தயாரித்து, தத்தமது நாட்டு பிரஜைகளுக்கு வழங்கி, கொரோனாத் தொற்று ஏற்பட முடியாதவர்களாக அவர்களை மாற்றுவதில் முனைப்புக் காட்டுகின்றன அவை.

தேவையான 'டோஸ்' தடுப்பூசியை வாங்கிக் குவித்துத் தத்தமது பிரஜைகளைக் காத்துக் கொள்வதில் நாடுகள் துடிப்பாக நிற்கின்றன.

அதற்காக ஒவ்வொரு நாடும் பல லட்சம் தடுப்பூசிகளை ஒரே சமயத்தில் பெற்றுக் கொள்ள விழுந்தடித்து முயல்கின்றன.

ஆனால், இதே விடயத்தில் இலங்கை எதுவுமே செய்யவில்லை. தனது மக்களுக்குத் தடுப்பூசிப் பாதுகாப்பை ஏற்படுத்துவது குறித்து இந்தக் கணம் வரை அது சாத்தியமான எந்த முயற்சியையும் எடுக்கவேயில்லை.

மாறாக, ஆயுர்வேத மருந்து, யுனானி மருந்து, அந்த மருந்து, இந்த மருந்து என்று கொரோனாத் தடுப்புக்கு 38 வகையான மருந்துகள் பரிசோதனைக்கு வந்துள்ளன என்றும், அவற்றைப் பரிசோதிப்பதாகவும் அரசு கதை விட்டுக் கொண்டிருக்கின்றது.

கொரோனா வைரஸுக்கு எதிரான தடுப்பூசி ஒன்றை பெப்ரவரி இரண்டாம் வாரத்துக்குள் கொண்டு வரத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது என அரசின் சார்பில் மருந்து உற்பத்தி மற்றும் விநியோக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்திருக்கின்றார்.

ஆனாலும், அது மக்களுக்குத் தேவையான தடுப்பூசிகளைத் தாராளமாக எடுத்து வரும் முயற்சி போலத் தோன்றவில்லை.

தடுப்பூசி எடுத்து வரும் விடயத்தில் இரண்டு முக்கிய விடயங்கள் தொடர்புபடுகின்றன.

ஒன்று – பெருந்தொகை நிதி அதற்குத் தேவை. அதுவும் இரண்டு கோடிக்கு மேற்பட்ட மக்கள் அனைவருக்கும் இரண்டு 'டோஸ்' தடுப்பூசி கொடுப்பதாயின் அந்த எண்ணிக்கையிலான தடுப்பூசிக்குப் பல ஆயிரம் கோடி ரூபா நிதி தேவைப்படும்.

அடுத்தது – அந்தத் தடுப்பூசிகளை உயர் குளிரூட்டல் வசதியுடன் ஆங்காங்கே சேமித்துப் பேணி, விநியோகிப்பதற்குப் பாரிய கட்டுமானம் தேவைப்படும்.

இந்த இரண்டுக்கும் எந்த ஆயத்தமும் செய்யப்பட்டதாக இல்லை. இவை இரண்டும் திடுதிப்பென சில நாள்களில் – சில வாரங்களில் – செய்யக் கூடிய விடயங்களே அல்ல. அதிக கவனம், ஈடுபாடு காட்டி முன்னாயத்தத்துடன் முன்னெடுக்கப்பட வேண்டிய வேலைகள் இவை.

இந்த ஆயத்தங்கள் எல்லாம் செய்யாமல் நாட்டு மக்களுக்குத் தடுப்பூசி விரைவில் என்பது வெறும் கையால் முழம் போடுவதற்கு ஒப்பானது.

## மேல்மாகாணப் பாடசாலைகளை திறப்பது குறித்து நாளை தீர்மானம்

### கல்வி அமைச்சர் கூறுகின்றார்



மேல் மாகாணத்தில் பாடசாலைகளை மீண்டும் திறப்பது தொடர்பிலான தீர்மானம் நாளை 21 ஆம் திகதி அறிவிக்கப்படும் என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கடந்த (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர் –

இந்த விடயம் தொடர்பாக சுகாதார அமைச்சர் மற்றும் சுகாதார அதிகாரிகளுடன் விவாதித்தார் எனத் தெரிவித்தார்.

எனவே விவாதிக்கப்பட்ட அனைத்து விடயங்களும் மதிப்பாய்வு செய்யப்படும் என்றும் இறுதி முடிவு திங்கட்கிழமை அறிவிக்கப்படும் என்றும் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கூறினார்.

இதேவேளை டிசெம்பர் 23 ஆம் திகதி வரை காலி வலய கல்விக்குற்பட்ட பாடசாலைகளை மூட தென் மாகாண கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது.

அத்தோடு அரச பாடசாலைகளுக்கு எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் மூன்றாம் தவணை விடுமுறை வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் 2021 ஜனவரி 03 ஆம் திகதிவரை பாடசாலை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் 2021 ஆம் ஆண்டுக்கான கல்வி நடவடிக்கைகள் ஜனவரி 4 ஆம் திகதி ஆரம்பமாகும் எனவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

## எட்டு லட்சம் வழக்குகள் நீதிமன்றில் நிலுவையில்!

நாடளாவிய ரீதியிலுள்ள நீதிமன்றங்களில் சுமார் 8 லட்சம் வழக்குகள் நிலுவையில் உள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதியமைச்சின் செயலாளர் எம்.எம்.பீ.கே. மாயாதுன்னே இதனைத் தெரிவித்துள்ளார்.

இவற்றை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள மேலும் 15 வருடங்கள் தேவைப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வழக்குகளை விசாரணை செய்வதைத் துரிதப்படுத்துவதற்காக, நீதிமன்றங்கள் மற்றும் நீதிவான்களின் எண்ணிக்கையை இரண்டு மடங்காக அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதனிடையே, சிறைச்சாலைகளுக்குள் நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்காக சுமார் 8 ஆயிரம் கைதிகளுக்கு புனர்வாழ்வளிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில், போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களை ஒரு வருட காலத்துக்கு புனர்வாழ்வளிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மீனவர்களின் போராட்டம் 5 ஆவது நாள் தொடர்ந்தது





இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகளால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக தெரிவித்து முல்லைத்தீவு மீனவர்கள் கடந்த 15 ஆம் திகதி ஆரம்பித்த தொடர் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று ஐந்தாவது நாளாகவும் இடம்பெற்றது.

அண்மைய நாள்களாக முல்லைத்தீவு மாவட்ட கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் இழுவை படகுகளின் அத்துமீறிய செயல் காரணமாக தொடர்ச்சியாக தமது வாழ்வாதாரங்கள் பாதிக்கப்படுவதாகத் தெரிவித்து –

இந்திய, இலங்கை அரசாங்கம் உரிய வகையில் பேச்சுகளை நடத்தி, எல்லை மீறி தமது பகுதிகளில் வருகின்ற மீன்பிடி படகுகளை கட்டுப்படுத்துவதற்கான உரிய நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தி தமக்கு தமது வாழ்வாதாரத் தொழிலை நிம்மதியாக செய்வதற்கான சூழலை ஏற்படுத்தித் தருமாறு கோரி கவனயீர்ப்பு போராட்டத்தை நடத்திவருகின்றனர்.

எல்லை தாண்டி வருகின்ற மீனவர்களைக் கட்டுப்படுத்த இலங்கை கடற்படையினர் எந்த விதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை எனவும், எல்லைதாண்டி வந்தவர்களை உரிய வகையில் கட்டுப்படுத்தினால் எமது வாழ்வாதாரத் தொழிலை சிறந்த முறையில் செய்து கொண்டு இருக்க முடியும் எனவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் இடத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், சாள்ஸ் நிர்மலநாதன், வினோ நோகராதலிங்கம் ஆகியோர் சென்று மீனவர்களுடன் கலந்துரையாடியுள்ளார்.

## 2 ஆயிரத்து 400 முறைப்பாடுகள் பொலிஸாருக்கு எதிராகப் பதிவு!

இந்தவருடத்தின் இதுவரையானகாலப்பகுதியில் பொலிஸாருக்கு எதிராக 2 ஆயிரத்து 400 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் முன்னாள் பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ இதனைத் தெரிவித்துள்ளார்.

அவற்றில் 51 வீதமான குற்றச்சாட்டுகளுக்கு தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸார் உரிய நடவடிக்கைகளை எடுக்காமை மற்றும் அதிகார துஷ்பிரயோகத்

குற்றச்சாட்டுகள் கிடைத்துள்ளன எனவும் அவர் கூறியுள்ளார்.

இதுவரை விசாரணை நடத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபரால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, பொலிஸாரின் நடவடிக்கைகள் தொடர்பில் பொலிஸ் திணைக்களத்தில் தொடர்ந்தும் முறைப்பாடுகளை பதிவு செய்ய

சமூக நல அறிவிப்பு

# மக்கள் அதிகமாக ஒன்றுகூடும் இடங்களை தவிருங்கள்!



**கொரோனா பரவல் தொடர்பில் பரவும் கருத்துக்கள் மூலமாக மக்கள் விழிப்புணர்வு அடைகிறார்களோ இல்லையோ கண்டிப்பாக பெரும் குழப்பத்துக்கு ஆளாகின்றனர். இந்த நிலைமையை போக்க சரியான தகவல்களை முறைப்படி சொல்ல கடமைப்பட்டுள்ளோம் .**

- பொருள்கள் வாங்குவதற்காக சந்தைகளுக்கோ அல்லது மக்கள் அதிகமாக கூடுகின்ற கடைகளுக்கோ அல்லது குளிரூட்டப்பட்ட கடைகளுக்கோ செல்வதை இக் காலப்பகுதியில் தவிர்த்து, உங்கள் வீட்டுக்கு அருகாமையிலுள்ள கடையில் மக்கள் குறைவாக உள்ள வேளைகளில் பொருள்கள் வாங்குவதற்காக செல்லுங்கள்.

- கொரோனா வைரஸ் கிருமியானது மனிதர்களிடமிருந்தே மனிதர்களுக்குப் பரவுவதனால் இத் தொற்று அதிகமாக ஏற்படக்கூடிய இக் காலப்பகுதியில் மற்றவர்களுடனான தொடர்பினை மேற்கொள்வதற்கு இயன்றளவு தொலைபேசியினை உபயோகியுங்கள்.

**மேற்குறிப்பிட்ட செயற்பாடுகள் கொரோனாத் தொற்றிலிருந்து உங்களையும், உங்கள் குடும்பத்தையும் பாதுகாக்கும்.**

சமூக அக்கறையுடன் - கொரோனா தொடர்பான விழிப்புணர்வுத் தகவல்களை உங்களுக்கு வழங்க இன்று அனுசரணை வழங்குகின்றனர்:-





## ஜப்பானில் வரலாறு காணாத மோசமான கடும் பனிப்பொழிவு

ஜப்பானில் பெய்து வரும் கடுமையான வரலாறு காணாத பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது.

பனிப்பொழிவு காரணமாக கானேட்சு எக்ஸ்பிரஸ் நெடுஞ் சாலையில் ஒரு கார் பனியில் மூழ்கியது. இதனையடுத்து அந்த சாலை மூடப்பட்டதால் ஆயிரக்கணக்கான வாகனங்கள் 40 மணி நேரமாக வரிசை கட்டி நின்றன.

வாகன ஓட்டுனர்கள் பசியிலும் குளிரிலும் நடுங்கியபடியே காத்திருந்தனர். அவர்களுக்கு தொண்டு நிறுவனங்கள் மூலம் ரொட்டியும் குடி தண்ணீர் போத்தல்களும் விநியோகிக்கப்பட் டன. நேற்று தலைநகர் டோக்கியோ செல்லும் சாலைகள் மட் டும் சீரமைக்கப்பட்டன. மற்ற பகுதிகளில் பனிப்பொழிவால் பல நூறு வாகனங்கள் சிக்கியுள்ளன.

### நைஜீரியாவில் கடத்தப்பட்டு மீட்கப்பட்ட

## 344 மாணவர்களைப் பெற்றோர் ஆரத்தழுவி ஆனந்தக் கண்ணீர்..!

நைஜீரியாவில் துப்பாக்கி முனையில் கடத்திச் செல்லப்பட்ட 344 மாணவர்கள் விடுவிக்கப்பட்டமையை அடுத்து நீண்ட வரிசையில் காத்திருந்த பெற்றோர் தங்கள் குழந்தைகளைக் கண்டதும் ஆரத்தழுவி ஆனந்தக் கண்ணீர் சொரிந்த காட்சி காண் போரை நெகிழ வைத்தது.

கடந்த 11ம ஆம் திகதி இந்தக் குழந்தைகள் தங்கள் பள்ளியில் இருந்து கடத்திச் செல்லப்பட்டு காட்டுக்குள் வைக்கப்பட்டிருந் தனர். உளவுத்துறை தகவல்களை அடுத்து நான்கு மாநிலங்களை தாண்டிச் சென்று குழந்தைகளை பாதுகாப்பு படையினர் மீட்டு வந்தனர்.



உண்ண உணவுகூட இல்லாமல் காட்டில் விடப்பட்ட தாங்கள் இலைகளைத் தின்று இரண்டு நாள்கள் பசியாற்றினர் என மீட்கப்பட்ட மாண வர்கள் தெரிவித்தனர்.

## அமெ. துணை ஜனாதிபதிக்கு கொரோனாவுக்கான தடுப்பூசி



வொஷிங்டன்,டிசெ.19

அமெரிக்காவில் பைசர் நிறுவனமும், ஜெர்மனியின் பயோ என்டெக் நிறுவனமும் சேர்ந்து தயாரித்துள்ள தடுப்பூசியின் அவசர கால பயன்பாட்டுக்கு உணவு மற்றும் மருந்து நிர்வாகம் (எவ்.டி.ஏ) ஒப்புதல் அளித்துள்ளது. இதையடுத்து இந்த தடுப்பூசி போடும் பணி அங்கு தொடங்கி உள்ளது.

இந்த நிலையில், 61வயதான அமெரிக்க துணை ஜனாதிபதி மைக் பென்ஸுக்கு வொஷிங்டன் ஐசனோவர் நிர்வாக அலுவலகக் கட்டடத்தில், வால்டர் ரீட் தேசிய ராணுவ ஆஸ்பத்திரியை சேர்ந்த மருத்துவ பணியாளர் நேற்றுக் காலை தடுப்பூசி செலுத்தினார்.

இதன்மூலம் முதன்முதலாக கொரோனாத் தடுப்பூசி போட்டுக்கொண்ட உலகின் மிக உயர்ந்த தலைவர் என்ற பெயரை அவர் பெற்றார். அவரது மனைவி கரேன் மற்றும் நாட்டின் தலைமை மருத்துவ அதிகாரி ஜெரோம் ஆடம்ஸ் ஆகியோருக்கும் தடுப்பூசி செலுத்தப்பட்டது.

இது நேரடியாக டெலிவினில் ஒளிபரப்பப்பட்டது. அடுத்து நாடாளுமன்ற பிரதிநிதிகள் சபை சபாநாயகர் நான்சி பெலோசி, செனட் சபை பெரும்பான்மை தலைவர் மிட்ச் மெக்கன்னல் அடுத்த சில நாள்களில் தடுப்பூசி போட்டுக்கொள்ளப்போவதாக அறிவித்துள்ளனர்.

## ஸ்மார்ட்போன்கள் உற்பத்தி கொரோனாவினால் பாதிப்பு



கொரோனா பரவல் காரணமாக சர்வதேச அளவில் சிப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இதனால் கார், மின்னணு சாதனங்களான டி.வி, மொபைல்போன் உள் ளிட்டவற்றின் உற்பத்தியில் தாமதம் ஏற்படும் அபா யம் உள்ளதாக அவற்றின் தயாரிப்பாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கொரோனாவின் தாக்கம் மட்டுமின்றி, சீன தொழில்நுட்ப நிறுவனமான ஹுவாவேய் மீது அமெரிக்கா பொருளாதார தடைகளை விதித்துள்ளதாலும் சிப் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

எதிர்பார்த்ததை விடவும், லப்டொப்கள், கார்கள்,5 ஜி போன்களுக்கு கிராக்கி அதிகரிக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

## 2,000 அடி கீழே விழுந்தும் சேதமடையாத ஐபோன்!



பிரேசிலில் இரண்டாயிரம் அடி உயரத்தில் விமானத்தில் சென்ற போது தவறி விழுந்த ஐபோன் எந்தச் சேதமுமின்றி சிறிது நேரத்தில் கண்டுபிடிக்கப்பட்டது

ரியோ டி ஜெனிரோவைச் சேர்ந்த எர்னஸ்டோ காலியோட்டா என்பவர் தனது நண்பருடன் சிறிய விமானத்தில் சென்று கொண்டிருந்தார். விமானம் 2 ஆயிரம் அடி உயரத்தில் சென்று கொண்டிருந்தபோது சிறிய ஜன்னல் வழியாக எர்னஸ்டோ தனது ஐபோன் மூலம் இயற்கையைப் பதிவு செய்தார்.

அப்போது எதிர்பாரதவிதமாக ஐபோன் தவறி கீழே விழுந்தது.

பின்னர் தரையிறங்கிய எர்னஸ்டோ தொலைந்து போன ஐபோனை அதில் பதிவேற்றம் செய்யப்பட்ட ஜிபிஎஸ் உதவியுடன் கண்டுபிடித்தார். கடற்கரை மணலில் எந்தச் சேதமுமின்றி அந்த போன் கிடந்தது தெரியவந்தது.

## குருகுலம் தமிழ் மொழி ஒளிபரப்பு அட்டவணை

| 20.12.2020 | ஞாயிற்றுக்கிழமை |
|---|---|
| 04.00 - 04.55 | தரம் - 10 கத்தோலிக்கம் (1ஆம், 3ஆம்) தரம் - 11 கத்தோலிக்கம் (2ஆம், 4ஆம்) |
| 06.00 - 06.55 | தரம் - 10 சைவநெறி (1ஆம், 3ஆம்) தரம் - 11 சைவநெறி (2ஆம், 4ஆம்) |
| 09.00 - 09.55 | தரம் - 10 வரலாறு (1ஆம், 3ஆம்) தரம் - 11 வரலாறு (2ஆம், 4ஆம்) |
| 11.00 - 11.55 | தரம் - 10 இஸ்லாம் (1ஆம், 3ஆம்) தரம் - 11 இஸ்லாம் (2ஆம், 4ஆம்) |
| 12.00 - 12.55 | தரம் - 03 தமிழ் |
| 12.30 - 12.25 | தரம் - 03 கணிதம் (1ஆம், 3ஆம்) மற்றும் சுற்றாடல்சார் செயற்பாடுகள் (2ஆம், 4 ஆம் |
| 13.00 - 13.25 | தரம் - 04 கணிதம் |
| 13.30 - 13.55 | தரம் - 04 தமிழ் (1ஆம், 3ஆம்) மற்றும் சுற்றாடல்சார் செயற்பாடுகள் (2ஆம், 4 ஆம் |
| 14.00 - 14.25 | தரம் - 05 கணிதம் (1ஆம், 3ஆம்) மற்றும் ஆங்கிலம் (2ஆம், 4 ஆம் |
| 14.30 - 14.55 | தரம் - 05 தமிழ் (1ஆம், 3ஆம்) மற்றும் சுற்றாடல்சார் செயற்பாடுகள் (2ஆம், 4 ஆம் |
| 18.00 - 18.55 | தரம் - 10 ஆங்கிலம் (1ஆம், 3ஆம்) தரம் - 11 ஆங்கிலம் (2ஆம், 4ஆம்) |
| 23.30 - 24.30 | தரம் - 10 கிறிஸ்தவம் (1ஆம், 3ஆம்) தரம் - 11 கிறிஸ்தவம் (2ஆம், 4ஆம்) |

## பைடனின் பதவி ஏற்கும் விழா மிக எளிமையாக நடைபெறும்

அமெரிக்காவின் புதிய அதிபராக ஜோ பைடன் பதவியேற்கும் விழா, மிகவும் எளிமையாக நடத்தப் படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் கடந்த மாதம் 3 ஆம் திகதி நடந்த அதிபர் தேர்தலில், ஜனநாயக கட்சி வேட்பாளர் ஜோ பைடன் வெற்றி பெற்றுள்ளார். இதையடுத்து, இந்நாட்டின் 59 ஆவது அதிபராக அடுத்த மாதம் 20 ஆம் திகதி அவர் பதவியேற்கிறார். அதற்கான விழா ஏற்பாடுகளை வெள்ளை மாளிகை செய்து வருகிறது.



கொரோனா பாதிப்பு காரணமாக, பதவியேற்பு விழா மிகவும் எளிமையாக நடத்தப்படும் என்றும், மிகவும் குறைவான எண்ணிக்கையிலேயே விருந்தினர்கள் அழைக்கப்பட உள்ளனர் என்றும் வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது. மக்கள் கலந்து கொள்ள தடை விதிக்கப்படுவதாகவும்,வீடுகளில் இருந்தே மக்கள் இதை கண்டு மகிழலாம் என அதிகாரிகள் கூறியுள்ளனர்.

# சுங்கச்சாவடி இல்லாத இந்தியா இரு ஆண்டுகளில் உருவாக்கம்!

## நிதின் கட்கரி தெரிவிப்பு



ஜி.பி.எஸ். தொழில்நுட்ப அடிப்படையிலான சுங்க கட்டண வசூல் நடைமுறை பயன்பாட்டுக்குக் கொண்டு வருவதன் மூலம் அடுத்த இரண்டு ஆண்டுகளில் சுங்கச் சாவடிகளே இல்லாத இந்தியா உருவாக்கப்படும் என மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

டெல்லியில் நிகழ்ச்சி ஒன்றில் நேற்று வெள்ளிக்கிழமை பங்கேற்ற அவர், நாடு முழுவதும் வாகனங்களின் தடையற்ற போக்குவரத்தை உறுதிப்படுத்தும் வகையில், ஜி.பி.எஸ் தொழில்நுட்பம் அடிப்படையிலான சுங்க கட்டண வசூல் நடைமுறையை மத்திய அரசு இறுதி செய்துள்ளது எனக் கூறினார்.

இந்தத் தொழில்நுட்பத்தின் மூலம், வாகனங்களின் இயக்கத்தின் அடிப்படையில், அந்த வாகன உரிமையாளரின் வங்கிக் கணக்கிலிருந்து தானாக சுங்கக் கட்டணத்துக்கான தொகை எடுத்துக்கொள்ளப்படும்.

இந்த நடைமுறை பயன்பாட்டுக்குக் கொண்டு வருவதன் மூலம் அடுத்த இரண்டு ஆண்டுகளில் நாடு முழுவதும் சுங்கச் சாவடிகளே இல்லாத நிலை உருவாகும் எனச் சுட்டிக்காட்டினார்.

புதிதாக வரும் அனைத்து வணிக பயன்பாட்டுக்கான வாகனங்களிலும், வாகனம் இருக்குமிடத்தைக் கண்டறியும் (ஜிபிஎஸ்) தொழில்நுட்பம் இடம்பெற்றுள்ளன.

அதுபோல, பழைய வணிக வாகனங்களிலும் ஜிபிஎஸ் தொழில்நுட்பத்தைப் பொருத்துவதற்கான திட்டத்தை மத்திய அரசு விரைவில் அறிமுகம் செய்ய உள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# காங்கிரஸ் மூத்த நிர்வாகிகளுடன் சோனியா காந்தி ஆலோசனை!



காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி தலைமையில் டெல்லியில் விசேட கூட்டமொன்று தற்போது நடைபெற்று வருவதாக இந்திய ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

டெல்லியில் சோனியாகாந்தி தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் காங்கிரஸ் கட்சிக்கு புதிய தலைவர் தேர்வு, தமிழகம், புதுச்சேரி, கேரளா, மேற்குவங்காளம், அசாம் உள்ளிட்ட மாநிலங்களில் அடுத்தாண்டு நடைபெறும் சட்டப்பேரவை தேர்தலை எதிர்கொள்வது தொடர்பாகவும் டெல்லியில் வேளாண்சட்டங்களுக்கு எதிரான விவசாயிகள் போராட்டம் பற்றியும், நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் ரத்து செய்யப்பட்டது பற்றியும் விவாதிக்கப்பட்டு வருவதாக தகவல் வெளியாகி உள்ளது.

காங்கிரஸ்கட்சியில் அமைப்பு ரீதியாக திருத்தம் மேற்கொள்ள வேண்டும் என கட்சித்தலைமைக்கு கடிதம் எழுதிய அதிருப்தி தலைவர்களுடனும், சோனியா காந்தி ஆலோசனை நடத்தி வருகிறார்.

இந்தக் கூட்டத்தில் காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி, ராஜஸ்தான் முதல்வர் அசோக் கெலாட், சசிதரூர், கமல்நாத் உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர்.

# பாகிஸ்தானுக்கு எதிராக தாக்குதல் நடத்த இந்தியா திட்டமிடுகின்றது!

## ஷா மகமூத் குரேஷி ஆரூடம்



பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா மீண்டும் துல்லியத் தாக்குதல் நடத்த திட்டமிட்டு வருவதாக அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் ஷா மகமூத் குரேஷி குற்றம்சாட்டியுள்ளார்.

2016 உரி தாக்குதலுக்கு பதிலடியாக ஆக்கிரமிப்பு காஷ்மீரிலுள்ள பயங்கரவாத முகாம் மீது இந்திய இராணுவம் துல்லியத் தாக்குதல் நடத்தியது. இதைதொடர்ந்து 2019 பெப்ரவரியில் நடைபெற்ற புல்வாமா தாக்குதலை அடுத்து, பாலாகோட் பயங்கரவாத முகாம் மீது இந்திய விமானப்படை அதிரடித் தாக்குதல் நடத்தியது.

இந்நிலையில் துபாயில் செய்தியாளர்களிடம் பேசிய குரேஷி, இந்தியா மீண்டும் தாக்குதல் நடத்த திட்டமிட்டு வருவதாக புலனாய்வுத்துறை தகவல் அளித்திருப்பதாக கூறினார்.

தாக்குதல் திட்டத்துக்கு கூட்டாளிகள் என கருதும் முக்கியமான நாடுகளிடம் மறைமுக ஒப்புதல் பெறும் முயற்சியில் இந்தியா ஈடுபட்டிருப்பதாகவும் குரேஷி தெரிவித்தார்.

# குழந்தை இல்லாத ஏக்கத்தினால் உயிரை மாய்த்த பொலிஸ் தம்பதி

## பெங்களூரில் சோகம்



பெங்களூரில் திருமணமாகி 10 ஆண்டுகள் ஆகியும் குழந்தை இல்லாத ஏக்கத்தில் போலிஸ் தம்பதி உயிரை மாய்த்துக் கொண்ட சோக சம்பவம் நிகழ்ந்துள்ளது.

பெங்களூரு கொத்தனூர் பகுதியை சேர்ந்தவர் சுரேஸ். இவரின் மனைவி ஷீலா. இருவரும் கர்நாடக பொலிஸில் பணியாற்றினர். பெங்களூர் வடகிழக்கு மண்டலத்தில் உள்ள சம்பிகேஹள்ளி உதவி பொலிஸ் கமினர் அலுவலகத்தில் சுரேஸ் எழுத்தராகவும் பெங்களூர் பொலிஸ் கட்டுப்பாட்டு அறையில் ஷீலாவும் பணி புரிந்து வந்தனர்.

இந்த தம்பதிக்கு கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்தது. ஆனால், குழந்தை இல்லை. மருத்துவ சிகிச்சை பெற்றும் பலனில்லை என்று தெரிகிறது. இதனால் சுரேஸும், ஷீலாவும் மனவருத்தத்தில் இருந்து வந்துள்ளனர்.

இந்த நிலையில், நேற்று காலை 10 மணிக்கு பிறகும் சுரேஸின் வீட்டின் கதவு திறக்கப்படவில்லை. அக்கம்பக்கத்தினர் சுரேஸின் வீட்டு கதவை தட்டிப்பார்த்தனர். ஆனால் கதவு திறக்கப்படவில்லை. இதையடுத்து, ஜன்னல் வழியாக வீட்டுக்குள் எட்டிப்பார்த்த போது, சுரேஸும், ஷீலாவும் இறந்தபடி கிடந்தனர். அதிர்ச்சியடைந்த மக்கள் உடனடியாக கொத்தனூர் பொலிஸாருக்கு தகவல் கொடுத்தனர். சம்பவ இடத்துக்கு வந்த கொத்தனூர் பொலிஸார் சுரேஸின் வீட்டின் கதவை உடைத்து உள்ளே சென்று சுரேஸ், ஷீலாவின் உடல்களை மீட்டு உடற் கூறு ஆய்வுக்காக வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

பொலிஸார் நடத்திய முதற்கட்ட விசாரணையில் திருமணம் முடிந்து 10 ஆண்டுகள் ஆன போதிலும் குழந்தை இல்லை காரணத்தால் சுரேஸும், ஷீலாவும் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டமை தெரிய வந்தது. தற்கொலைக்கு வேறு எதுவும் காரணம் உள்ளனவா? என்றும் பொலிஸார் விசாரித்து வருகின்றனர். இந்த சம் பவம் தொடர்பாக கொத்தனூர் பொலிஸார் வழக்குப்பதிவு செய்து உள்ளனர்.


# கல்யாணமாலை



வட சர்வதேச திருமண சேவை



| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
|---|---|
| பிறந்த திகதி - 1991.06.05 | பிறந்த திகதி - 1991.03.13 |
| மதம் - இந்து V | மதம் - இந்து V |
| நட்சத்திரம் - சதயம் | நட்சத்திரம் - அவிட்டம் 1 |
| செவ் - 02இல் | பாவம் - 28 |
| பாவம் - 41 1/4 | செவ் - 08இல் |
| கல்வி - பட்டதாரி | கல்வி - கனடா பட்டதாரி |
| தொழில் - வங்கி வேலை | தொழில் - கனடா PR |
| எதிர்பார்ப்பு - வெளிநாடு | எதிர்பார்ப்பு - கனடாவில் மணமகன் தேவை. |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.

க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

077 3434 415
077 8578 528


# இந்தியாவில் கொரோனா பாதிப்பு ஒரு கோடியையும் தாண்டியுள்ளது!

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை ஒரு கோடியைக் கடந்துள்ளதுடன் 95 லட்சத்து 50 ஆயிரம் பேர் குணமடைந்துள்ளனர்.

இன்று (சனிக்கிழமை) காலை மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்ட தகவலின்படி, 'இந்தியாவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு கோடியை கடந்துள்ளது. இதற்கமைய மொத்த பாதிப்பு ஒரு கோடியே 4 ஆயிரத்து 599 ஆக உள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் 25 ஆயிரத்து 153 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. ஒரே நாளில் 347 பேர் மரணம் அடைந்துள்ளனர். இதன்மூலம் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு லட்சத்து 45 ஆயிரத்து 136 ஆக உயர்ந்துள்ளது. கொரோனா பாதிப்பில் இருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 95 லட்சத்து 50 ஆயிரத்து 712 ஆக உயர்ந்துள்ளது.

நாடு முழுவதிலும் உள்ள பல்வேறு வைத்தியசாலைகளில் 3 லட்சத்து 8 ஆயிரத்து 751 பேர், சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை 12 ஆவது நாளாக 4 லட்சத்துக்கும் குறைவாக உள்ளது. மொத்த உயிரிழப்பு 1.45 சதவீதமாக நீடிக்கிறது. குணமடையும் விகிதம் 95.46 சதவீதமாக உயர்ந்துள்ளது. – என சுகாதார அமைச்சின் தகவல் தெரிவிக்கின்றது.

# லடாக் எல்லைப் பிரச்சினை தொடர்பாக மீண்டும் பேச்சு!



லடாக் எல்லைப் பிரச்சினை தொடர்பாக இந்தியா – சீனா இராணுவம் இடையே மீண்டும் பேச்சு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இரு நாடுகளின் எல்லை விவகாரம் தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு பகுதியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டுள்ளதாக இந்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மேற்குப் பகுதியில் இருந்து படைகளை முழுவதுமாக விலக்குவதற்கு இருதரப்பிலும் ஒன்பதாவது கட்டமாக இராணுவ கொமாண்டர்கள் மட்டத்திலான பேச்சைத் தொடர ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது.


மாலை திருமண சேவை
Maalai Matrimony
இணையத்தள திருமண சேவை
www.maalai.com
இணைய வழியாக உங்கள் துணையைத்தேட எங்களை நாடுங்கள்!
வாடிக்கையாளர்/ நண்பர்கள் 2021ஆம் ஆண்டுக்கான பஞ்சாங்கக் கலண்டறை எமது அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு - 077 408 8241
இணையத் தளம் - www.maalai.com
DMI தனியார் கல்வி நிலையத்திற்கு அருகில், யாழ்ப்பாணம்.
எம்மிடம் தரகுக் கட்டணம் இல்லை


அமரர் பேணாட் மதுரநாயகம் நினைவுக்
கவிதைப் போட்டி
போட்டி 2 பிரிவுகளாக நடைபெறும்
1. பாடசாலை மாணவர்களுக்கானது (தரம் 1 முதல் 12 வரை)
"கை கழுவினார்கள்....."
2. பெரியவர்களுக்கானது (வயது எல்லை கிடையாது)
"முகத்தின் முகவரிகளைத் தொலைத்தோம்....."
பரிசுத் தொகை:
பாடசாலை மணவர்களுக்கு
1ம் பரிசு - 3000/=
2ம் பரிசு - 2000/=
3ம் பரிசு - 1000/=
பெரியவர்களுக்கு
1ம் பரிசு - 5000/=
2ம் பரிசு - 3000/=
3ம் பரிசு - 1000/=
30 வரிகளுக்கு உட்பட்டதாக இருத்தல்.
புதுக்கவிதையாக / மரபுக்கவிதையாக இருக்கலாம்.
நிச்சயம் சுயமாக வரைந்த, தனது சொந்த கையெழுத்துடன்
அனுப்பிவைக்க வேண்டும்.
நோக்கம் : -
காலச் சூழ்நிலையில் விடுமுறைப்பொழுதில் மனதை ஒருமுறை மகிழ்விக்க
இறுதித் திகதி: - 31.12.2020
போட்டி முடிவுகள் 14.01.2021 பொங்கல் தினத்தன்று
காலைக்கதிர் பத்திரிகையில் வெளியிடப்படும்.
உங்கள் ஆக்கங்களை எமக்கு தபால் மற்றும் மின்னஞ்சல் ஊடாக அனுப்பிவைக்கவும்.
ஆக்கங்கள் அனுப்பவேண்டிய முகவரி
தபால் :-
அமரர் பேணாட் நினைவுக் கவிதைப்போட்டி
காலைக்கதிர்
இல. 30, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் :- kalaikkathiradvt@gmail.com


SOORYA
சிறந்த 10 ஆக்கங்களுக்கு
SOORYA நத்தார் பரிசுப் பொதிகள்!!
இந்த பண்டிகைக் காலத்தில் சூர்யாவிடமிருந்து 4,000 ரூபா பெறுமதியான பரிசுப்பொதிகளை வெல்லுங்கள்!!
நீங்கள் செய்ய வேண்டியது:-
fb.com /Sun Match
1. எமது சூர்யா Sun Match Facebook page ஐ Like செய்து போட்டிக்கான Post ஐ உங்களது timeline இல் Share செய்யுங்கள்.
2. சூர்யா மெழுகுவர்த்திகளைக் கொண்டு நீங்கள் தயாரித்த அலங்காரத்தைப் புகைப்படமெடுத்து அதனை எமது page இல் comment செய்யுங்கள் (சூர்யா மெழுகுவர்த்திப் பெட்டியொன்று அருகில் தெரியும் விதமாக புகைப்படமெடுக்கவும்).
3. அதில் 5 நண்பர்களை Tag செய்யுங்கள்.
போட்டி முடிவுத் திகதி 30.12.2020
தெரிவு செய்யப்படும் 10 வெற்றியாளர்களுக்கு அவர்களது இல்லங்களுக்கே பரிசுப்பொதிகள் அனுப்பி வைக்கப்படும்.
சூர்யா மெழுகுவர்த்திகள் 2 அளவுகளில் கிடைக்கின்றன.
மேலதிக விபரங்களுக்கு 0773598440 என்ற இலக்கத்தை தொடர்புகொள்ளவும்.

# இந்திய மீனவர்களின் அத்துமீறலைத் தடுக்க இலங்கை மற்றும் இந்தியா இடையில் பேச்சு

இந்திய மீனவர்களின் அத்துமீறலைத் தடுக்கும் முகமாக எதிர்வரும் 30 ஆம் திகதி இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பேச்சு இடம்பெறவுள்ளதாக கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இதற்குரிய முன்னேற்பாடாக வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து கடற்றொழிலாளர் சங்கங்களுடனான விசேட சந்திப்பு வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

மேற்படி கூட்டத்தில் வடக்கு மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது டன் எதிர்வரும் 30 ஆம் திகதி இடம்பெறவுள்ள பேச்சில் முன்வைக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாகவும் கலந் துரையாடப்பட்டது.

கடந்த காலங்களில் அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காவிட்டாலும் தற்போதுள்ள அரசாங்கத்தால் ஒரு சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதன் போது தெரிவித்துள்ளார்.

எனவே, இந்தச் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்தி மீனவர்கள் பிரச்சினைக்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாகவும் அதற்கு அனைத்து மீனவர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.



## மட்டக்களப்பு மேய்ச்சல் தரைகள் அபகரிப்பு விசாரணைகள் 22ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தின் மயிலத்தமடு, மாதவனை பகுதியில் மேய்ச்சல்தரை அபகரிப்பு தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மனுவின் மீதான விசாரணை ஜனவரி மாதம் 22 ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரை பகுதியை அத்துமீறி அபகரித்தமை தொடர்பில் பாதிக்கப்பட்டுள்ள கால்நடை பண்ணையாளர்களின் சார்பில் மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் கடந்த வாரம் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

பண்ணையாளர்கள் சார்பாக சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ்.ரட்ணவேல் தலைமையிலான சட்டத்தரணிகள் ஆஜராகியிருந்தனர்.

இதன் பிரதிவாதிகளாக மட்டக்களப்பு மாவட்ட காணி பிரிவுக்கு பொறுப்பான மேலதிக அரசாங்க அதிபர், ஏறாவூர்ப்பற்று, கிரான் ஆகிய பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளர்கள், பொலிஸ் திணைக்களம், வனத் திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றில் ஆஜராகியிருந்தனர்.



இந்த வழக்கு ஜனவரி மாதம் 22 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்காக ஒத்திவைக்கப்பட்டது.

## இலங்கை மக்களுக்கு பெப்ரவரியில் தடுப்பூசி

### அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவிப்பு



கொரோனா வைரஸுக்கு எதிரான தடுப்பூசி ஒன்றை பெப்ரவரி இரண்டாம் வாரத்துக்குள் கொண்டுவரத் தேவையான நடவடிகைகளை அரசாங்கம் மேற்கொண்டுவருகின்றது என மருந்து உற்பத்தி மற்றும் விநியோக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

உலக நாடுகள் கொரோனாவிற்கு எதிரான தடுப்பூசிகளைப் பயன்படுத்த ஆரம்பித்திருக்கின்ற நிலையில் எமது நாட்டுக்கு தடுப்பூசியை கொண்டுவருவதற்காக அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கை தொடர்பில் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

கொரோனா வைரஸுக்கு எதிராகப் பல தடுப்பூசிகள் தற்போது அறிமுகமாகி வருகின்றன. அந்தவகையில் மொடர்னா, பய்சர் சீனா மற்றும் ரஷ்ய நாட்டு தடுப்பூசிகளை எமது நாட்டுக்கு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்துவருகின்றோம்.

அதுதொடர்பான ராஜதந்திர கலந்துரையாடல்கள் சீன அரசாங்கம் மற்றும் ரஷ்ய அரசாங்கங்களுடன் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

அத்துடன் கொவிட் 19 தடுப்பூசி தொடர்பில் உலக சுகாதார அமைப்பின் பரிந்துரைகளை ஆராய்ந்து பார்த்து, பெற்றுக்கொள்ள முடியுமாகிய முதலாவது சந்தர்ப்பத்திலேயே சீனா அல்லது ரஷ்யா உற்பத்தி தடுப்பூசி ஒன்றை நாட்டுக்கு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்போம்.

மேலும் பைஸர் தடுப்பூசிகளை களஞ்சியப்படுத்துவதற்காக விசேட குளிர்சாதன வசதி தேவைப்படுகின்றது. அந்த வசதிகளை அதிகரிப்பதற்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்கு உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன தங்களது விருப்பத்தைத் தெரிவித்திருக்கின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## காங்கேசன்துறைக்கும் காரைக்காலிற்கும் இடையில் படகுச்சேவை ஒன்றை ஆரம்பிக்க ஆளுநர் உத்தேசம்





கொழும்பு, டிசெ.19

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலைக்கு அண்மையிலுள்ள நிலத்தின் உரிமம் தொடர்பான பிரச்சினை, காங்கேசன்துறைக்கும் காரைக்காலிற்கும் இடையில் படகுச்சேவை ஒன்றை ஆரம்பிப்பது தொடர்பாக வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில் வடமாகாண ஆளுநர் செயலகத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன், காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையின் அபிவிருத்தி மற்றும் இறங்கு துறை அபிவிருத்தி தொடர்பாகவும் விரிவாக பேசப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை நிலப்பகுதியில் துண்டங்களாக காணப்படும் பகுதிகளின் உரிமை தொடர்பான பிரச்சினைகளை காணி நில அளவைத் திணைக்களத்தின் உதவியுடன், கள விஜயம் மேற்கொண்டு உறுதிப்படுத்துமாறு இதன்போது வடக்கு ஆளுநர் பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்துடன், காங்கேசன்துறைப் பகுதியில் சிதைவடைந்துள்ள அணைக்கட்டுகளை புனரமைப்பதற்குத் தேவையான கற்களை வவுனியாவிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு வவுனியா அரச அதிபருடன் கலந்துரையாடி உரிய தீர்வைப் பெற்றுத்தருவதாகவும் ஆளுநர் உறுதியளித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்த கலந்துரையாடலில் இராஜாங்க அமைச்சர் ஜயந்த சமரவீர அமைச்சின் செயலாளர், ஆளுநரின் செயலாளர், உதவிச் செயலாளர், துறைமுக அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள், காணித் திணைக்கள அதிகாரிகள், மாவட்ட அரச அதிபர், தெல்லிப்பழை பிரதேச செயலாளர் மற்றும் துறைசார் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.





மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!

நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள் யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.

விலை - 150/=







கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.12.2020 இல் வெளியிடப்பெற்றது.